A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 44 / 2024</u>**

திரு K.A.A. ராஜா,
44/55, T.N.K. புரம், வடக்கு கொங்கு மெயின் ரோடு,
ஜெய சக்தி அரிசி கடை பின்புறம்,
பாய் காம்பவுண்ட், திருப்பூர் – 641607 .

………மேல்முறையீட்டாளர்
(திரு K.A.A. ராஜா)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K. புதூர், மதுரை – 625 007.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

3. உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

4. உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/செங்குளம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. முத்தரசு, செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்
திரு M. மாரிமுத்து, உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/ செங்குளம்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 06-06-2024</u>**

**<u>கேட்புரை நாள் : 08-08-2024</u>**

**<u>ஆணை நாள்: 19-08-2024</u>**

06.06.2024 அன்று பெறப்பட்ட திரு K.A.A. ராஜா, 44/55, T.N.K. புரம், வடக்கு கொங்கு மெயின் ரோடு, ஜெய சக்தி அரிசி கடை பின்புறம், பாய் காம்பவுண்ட், திருப்பூர் – 641607 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 44/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

24/2, செங்குளம் கிழக்கு தெருவில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு கூடுதல் மின்பளு வேண்டி மும்முனை மின்சாரம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வீட்டின் மின் இணைப்பு எண் 135–001–746–ற்கு கூடுதல் மின்பளு வேண்டி மும்முனை மின்சாரம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளருக்கு Bare conductor மூலம் மும்முனை மின் இணைப்பு வழங்க முடியாத நிலை உள்ளதால் மேல்முறையீட்டாளரிடம் கேபிள் வாங்கி தருமாறு கோரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் மதுரை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின் பகிர்மான வட்டம் 28.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 மதுரை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *"விண்ணப்பதாரருக்கு மும்முனை இணைப்பு வழங்க மின்சப்ளை எடுக்கும் இடம் (அவருடைய பக்கத்துவீடு) வரை கேபிள் மூலம் மும்முனை மின் இணைப்பு வழங்க விண்ணப்பதாரருக்கு Bare Conductor மூலம் மும்முனை மின் இணைப்பு வழங்க முடியாத நிலை உள்ளதால் விண்ணப்பதாரரிடம் கேபிள் வாங்கி தர கோரப்பட்டது. விண்ணப்பதாரர் அதை ஏற்றுக் கொள்ளாததால் பணியை முடிக்க இயலாததை தொடர்ந்து கடந்த 16.02.2024 அன்று விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என எதிர்மனுதாரர் தெரிவித்ததை மன்றம் ஏற்றுக் கொண்டு மனு முடித்துவைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு K.A.A. ராஜா கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. முத்தரசு, செயற்பொறியாளர்/பகிர்மானம்/ திருமங்கலம் மற்றும் திரு M. மாரிமுத்து, உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/ செங்குளம், மதுரை மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, 24/2 செங்குளம் கிழக்கு தெருவில் உள்ள தனது வீட்டிற்கு (மின் இணைப்பு எண். 135-001 746/TFIA) கூடுதல் மின் பளு வேண்டியதன் காரணமாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டி 06.09.2023 அன்று ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்க கட்டணத் தொகை ரூ.9,215/ அன்றே செலுத்தி விட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 அதன் பின்னர் உதவி பொறியாளர்/செங்குளம் திரு.மாரிமுத்து அவர்கள் கள ஆய்வு செய்ய வந்த போது தனது வீட்டிற்கு வந்து மதிப்பீடு தயார் செய்ய ரூ.1,500/ கொடுக்க வேண்டும் எனக் கேட்டு தன்னிடம் ரூ.1,500/- வாங்கிச் சென்றதாகவும், கூடுதல் மின் பளு மற்றும் ஒருமுனையில் இருந்து மும்முனை மின்சாரமாக மாற்றி வழங்க திருமங்கலம்/உதவி செயற்பொறியாளரால் 29.09.2023 அன்று மதிப்பீடு அனுமதி (626/A21/036/23-24/29.09.2023) வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதன் பின்னர் தான் உதவி மின் பொறியாளர்/செங்குளம் பிரிவு மற்றும் உதவி செயற்பொறியாளர்/நகர்/திருமங்கலம் மற்றும் செயற்பொறியாளர்/நகர்/திருமங்கலம் போன்ற அனைத்து அதிகாரிகளிடமும் நேரிலும் கைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு தனக்கு விரைவில் மும்முனை மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் யாரும் செவிசாய்க்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கழித்து 16.02.2024 அன்று தனது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக குறுஞ்செய்தி வாயிலாக அறிவிக்கப்பட்டதாகவும், இது தனக்கு மிகவும் மனஉளைச்சலை ஏற்படுத்திவிட்டதாகவும், அதன் பின்னரே தான் மதுரை மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்திற்கு இணையத்தின் வாயிலாக தனது கோரிக்கையினை 22.02.2024 அன்று பதிவு செய்ததாகவும், மீண்டும் 27.02.2024 அன்று மேலே கூறிய மூன்று அதிகாரிகளுக்கும் கடிதம் வாயிலாக தனது

விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்து தனது வீட்டிற்கு மும்முனை மின் இணைப்பு வழங்க வேண்டி கேட்டுக் கொண்டதாகவும், அதற்கும் மூவரும் தனக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தான் உதவி மின்பொறியாளர்/செங்குளம் திரு.மாரிமுத்து அவர்களை கைபேசியில் தொடர்பு கொண்டு தனது விண்ணப்பம் ரத்து செய்ததாக வந்த குறுஞ்செய்தி தொடர்பாக கேட்ட போது தனக்கு தெரியாது என்று கூறிவிட்டதாகவும், மதிப்பீடு தயார் செய்ய ரூ.1500/- வாங்கிச் சென்றீர்களே என்று கேட்தற்கு அதற்கு உரிய ரசீது வழங்கப்படும் என தெரிவித்ததாகவும், இது நாள் வரை எந்த ரசீதும் வழங்கப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 இதனை தொடர்ந்து 28.02.2024 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும் மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் கலந்து கொள்ளுமாறு 27.02.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தலைவர், மின்நுகர்வோர் குறைதீர்மன்றம்/மதுரை அவர்கள் கோரியிருந்ததாகவும்,(க.எண். மே.பொ/ மமிபவ/மது/ செ.பொ/பொது/செ.பொ/ ம.தொ.அ/ கோ.CGRF/அ.170/24. நாள் 27.02.2024 கடித நகல் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இருந்த போதிலும் உடனடியாக தான் திருப்பூரிலிருந்து விரைந்து மதுரை வந்து மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் படி உரிய கால கெடுவுக்குள் (60 நாட்களுக்குள்) தனக்கு மும்முனை மின்சாரம் வழங்காமல் விண்ணப்பம் பதிவு செய்து பணம் செலுத்தி ஐந்து மாதங்கள் கடந்தும் தனக்கு மும்முனை மின்சாரம் வழங்காமல் மாறாக தனது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதென முறையிட்டதாகவும், தான் செலுத்திய பணம் ரூ.9.235/ ல் ரூ.1345/- மட்டுமே திருப்பி அளிக்கப்படும் என தனக்கு கிடைத்த குறுஞ் செய்தி தொடர்பாகவும் முறையிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும், உதவி மின் பொறியாளர்/செங்குளம் அவர்கள் தனது வீட்டிற்கு வந்து கள ஆய்வு செய்து அளந்து விட்டு மதிப்பீடு செய்வதற்கு ரூ. 1.500/- கொடுக்க வேண்டும் எனக் கூறி தன்னிடம் ரூ.1500/- பணம் வாங்கிச் சென்றதையும் மன்றத்தில் முறையிட்டதாகவும், அதற்கு தலைவர் மற்றும் செயற்பொறியாளர்/திருமங்கலம்

அவர்கள் உதவி மின் பொறியாளர்/செங்குளம், திரு.மாரிமுத்து என்பவரை கைபேசியில் அழைத்து உடனே வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்குமாறு கூறியதாகவும், அந்தப் பணமும் இது நாள் வரை தனக்கு கொடுக்கப்படவில்லை எனவும், மேலும் தனது விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்து தனக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என முறையிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 தான் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு இணையம் வாயிலாக முறையீடு மனு செய்த போது Respondent ஆக (பதிலளிப்பவராக) உதவி பொறியாளர்/செங்குளம் அவர்களையே சுட்டிக் காட்டியிருந்ததாகவும், அதற்கு மாறாக அவரை விட்டு விட்டு செயற்பொறியாளர்/திருமங்கலம் அவர்கள் எதிர்மனுதாரராக கலத்து கொண்டது தனக்கு ஏற்புடையதாக இல்லை எனவும், மன்றத்தில் எதிர்மனுதாரராக கலந்து கொண்ட செயற்பொறியாளர்/ திருமங்கலம் திரு முத்தரசு அவர்கள் விண்ணப்பதாரராகிய தன்னிடம் கேபிள் வாங்கித் தருமாறு கோரப்பட்டதாகவும் விண்ணப்பதாரர் அதை ஏற்றுக் கொள்ளாததால் பணியை முடிக்க இயலாததை தொடர்ந்து 16.02.2024 அன்று விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்ததாகவும், அதனையும் மன்றம் ஏற்றுக் கொண்டு மனு முடித்து வைக்கப்படுவதாக தலைவர் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை அவர்கள் தீர்வு வழங்கி உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 விண்ணப்பதாரரிடம் கேபிள் வாங்கித் தருமாறு கோரப்பட்டதாகவும் அதை விண்ணப்பதாரர் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும், விண்ணப்பதாரராகிய தனக்கு உதவி பொறியாளர்/செங்குளம் திரு.மாரிமுத்து, உதவி செயற்பொறியாளர்/நகர்/திருமங்கலம்/திரு.ராம சுப்பு, செயற்பொறியாளர்/ திருமங்கலம் திரு.முத்தரசு ஆகிய மூவரில் எவரிடமிருந்தும் தனக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எந்த கடிதமும் கிடைக்கப் பெறவில்லை எனவும், இது தொடர்பாக மன்றத்தில் விண்ணப்பதாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதா? என்ற கேள்வியும் கேட்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 இதற்கும் மேலாக 28.02.2024 அன்று மன்றக் கேட்புரையில் முறையீட்டாளர் கலந்து கொள்ளவில்லை என அப்பட்டமாக ஒரு பொய்யை சொல்லி எதிர்மனுதாரர்

தெரிவித்ததை மன்றம் ஏற்றுக் கொண்டு மனு முடித்து வைக்கப்பட்டதாகவும், உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஆகிய மூவரும் ஒப்பமிட்டு மூவரின் உத்தரவின் படி செயலாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் தனக்கு 30.03.2024 நாளிட்ட கடிதம் அனுப்பி உள்ளதாகவும், இவ்வாறு நீதி வழங்கக் கூடிய அனைவரும் பொய்யர்களாக உண்மைக்கு புறம்பாக நடந்து கொண்டால் மன்றத்தின் தீர்வு எவ்வாறு உண்மையாக இருக்க முடியும், விண்ணப்பதாரர் கேபிள் வாங்கித் தராததால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக கூறும் செயற்பொறியாளர்/ திருமங்கலம் அவர்களின் வாதத்தை ஏற்றுக் கொள்ளும் மன்றம், விண்ணப்பதாரருக்கு மின் இணைப்பு வழங்க (கட்டணத் தொகை ரூ.9235/– முழுவதும் செலுத்திய பிறகும்) மாற்று ஏற்பாடு ஏன் செய்யவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 விண்ணப்பதாரர் தான் கேபிள் வாங்கிக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என விண்ணப்பதாரருக்கு முன் அறிவிப்பு கடிதம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டதா? என்ற கேள்வியும் கேட்கப்படவில்லை எனவும், உதவி பொறியாளர்/செங்குளம் திரு.மாரிமுத்து அவர்கள் ரூ.1500/– விண்ணப்பதாரரிடம் வாங்கிச் சென்றார் என மன்றத்தின் முன் குற்றம் சாட்டப்பட்டும் உதவி பொறியாளர்/செங்குளம் திரு.மாரிமுத்து அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளாமல் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கச் சொல்லும் மன்றத் தலைவரின் பேச்சு கேலிக் கூத்தான ஒன்று எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சார வழங்கல் தொகுப்பு விதிகளின் படி மின்நுகர்வோருக்கு மின் இணைப்பு வழங்கல் என்பது முழுக்க முழுக்க உரிமம்தாரரையே சேர்ந்தது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 அவ்வாறிருக்க விண்ணப்பதாரராகிய மின்நுகர்வோரை கேபிள் வாங்கித் தர வற்புறுத்துவது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளுக்கு புறம்பானது எனவும், தமிழ்நாடு மின்சார வாரியம் கூறும் மின் இணைப்புக்கான கட்டணத் தொகை ரூ.9,235/– முழுவதையும் செலுத்திவிட்டு, மேலும் கேபிள் வாங்கிக் கொடுத்தால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்றால் (திருப்பூரில் பனியன் கம்பெனிகளில் தையல்

தொழில் செய்து வரும் கூலித் தொழிலாளியாகிய) தன்னால் எவ்வாறு மின் இணைப்பு பெற இயலும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர் தான் கேபிள் வாங்கி கொடுக்க வேண்டும் என வாரிய விதிகள் ஏதேனும் உள்ளதா எனக் கேட்டதற்கும், பொதுத் தகவல் அலுவலராகிய செயற்பொறியாளர்/ திருமங்கலம் திரு.முத்தரசு அவர்கள் சம்பந்தமில்லாமல் 06.01.2022 நாளிட்ட . (Lr.No. CE/SE/MM.II/EED/A5/F.DT/D.2239/22 dt 06:01.2022) நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் செயற்பொறியாளர்/திருமங்கலம் திரு.முத்தரசு அவர்கள், மின் நுகர்வோரை கேபிள் வாங்கி தரக் கூறுவது நடைமுறையில் உள்ள ஒன்று எனக் கூறியதாகவும், கூலித் தொழிலாளியாகிய தன் போன்ற ஆட்கள் பண வசதி இல்லாததால் இயலாமையின் காரணமாக கேபிள் வாங்கித் தர இயலாவிட்டால் வாரிய தரப்பில் மின் இணைப்பு வழங்க வேண்டியதும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் செயற் பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம் ஆகிய உயர் பதவியில் இருக்கும் திரு.முத்தரசு அவர்களின் கடமை தானே, அதை விடுத்து செயற்பொறியாளர்/திருமங்கலம் திருமுத்தரசு அவர்களே, விண்ணப்பதாரர் கேபிள் வாங்கித் தர ஏற்றுக் கொள்ளாததால் விண்ணப்பத்தை ரத்து செய்தேன் எனக் கூறுவது அவரது பொறுப்பினை தட்டிக் கழிப்பதாகவும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 மேலும் தனது விண்ணப்பத்தை மறு பரிசீலனை செய்து தனக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என முறையிட்டதற்கு செயற் பொறியாளர்/திருமங்கலம்/ திரு.முத்தரசு மற்றும் உதவி பொறியாளர்/ செங்குளம் திரு.மாரிமுத்து ஆகிய இருவரும் தன்னை மீண்டும் இணையத்தில் விண்ணப்பம் புதிதாக பதிவு செய்து கட்டணத் தொகை செலுத்தினால் தான் மின்சார இணைப்பு வழங்க முடியும் என தெரிவித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 எனவே மேன்மை பொருந்திய தமிழ்நாடு மின் குறைதீர்ப்பாளர்/சென்னை அவர்கள் தனது இந்த கோரிக்கையை மேல்முறையீட்டு மனுவாக ஏற்றுக் கொண்டு தனது விண்ணப்பத்தை மறு பரிசீலனை செய்து தனக்கு மும்முனை மின்சாரம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 **எதிர்மனுதாரரின் வாதங்கள்:**

6.1 மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா செங்குளம் கிழக்குத் தெருவில் உள்ள திரு K.A.A.ராஜா அவர்களின் வீட்டிற்கு ஏற்கனவே ஒருமுனை மின்இணைப்பு எண் 135-001-746 TF IA உள்ளதாகவும், திருK.A.A. ராஜா கடந்த 06.09.2023 அன்று இணையம் வாயிலாக தனது வீட்டிற்கு கூடுதல் மின்பளு கேட்டு ஒருமுனை மின்இணைப்பை (1KW) மும்முனை மின்இணைப்பாக கூடுதல் 3KW மாற்றித் தரும்படி விண்ணப்ப எண் 13509231278 மூலம் விண்ணப்பித்திருந்ததாகவும், இந்த விண்ணப்பம் திருமங்கலம் கோட்டம் செங்குளம் பிரிவிற்கு உட்பட்டதாகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 உதவி மின்பொறியாளர்/ செங்குளம் களஆய்வு செய்ததில் இந்த கூடுதல் மின்பளு மின் இணைப்பு 45 மீட்டருக்கு ACSR 7/2.59 mm conductor ஆகவும் மற்றும் 35மீட்டருக்கு PVC Cable ஆகவும் மின் விஸ்தீரனம் செய்து மின்இணைப்பு வழங்க உதவி செயற்பொறியாளர்/ திருமங்கலம் அவர்களிடம் உரிய அனுமதி பெற்றுள்ளதாகவும், ஏனெனில் திரு K.A.A ராஜா அவர்களின் வீடு இருக்கும் தெரு மிகவும் குறுகலான சந்தாக இருப்பதால் அந்த சந்தில் ஏற்கனவே இருக்கின்ற மின்தொடர் Cable ஆக தான் இருக்கின்றதாகவும், எனவே தற்பொழுதும் மும்முனை மின்சாரம் வழங்கவும், Cable போட உத்தேசித்து அதற்கான அனுமதியும் உதவி மின் பொறியாளர்/ செங்குளம் அவர்கள் பெற்றுள்ளதாகவும், மனுதாரர் கூடுதல் மின்பளுவிற்கு உண்டான கட்டணத்தை Online வழியாக செலுத்தியுள்ளதாகவும், இதைத்தவிர மனுதாரர் கூறியது போல் உதவி மின் பொறியாளர்/செங்குளம் அவர்கள் ரூ.1500ஐ கேட்டு பெறவில்லை எனவும், இது தவறான தகவல் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 PVC Cable TANGEDCO பண்டகசாலையில் இல்லாததால் விண்ணப்பதாரரிடம் PVC Cable வாங்கித் தரும்படியும் அதற்குண்டான தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் கழித்துத் தரப்படும் என்றும் 15 தினங்களுக்குள் Cable வாங்கித் தரவில்லை என்றால் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என்றும் உதவி மின்பொறியாளர் / செங்குளம் அவர்கள் அறிவிப்பு கடிதம் ஒன்றை திரு K.A.A.ராஜா அவர்களுக்கு அனுப்பியுள்ளதாக

(க.எண்.உமிபொ/செங்/கோ.CA/அஎண்.597/23-24 நாள்:19.12.2023 எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்பிறகு வெகுநாட்களாகியும் திரு. K.A.A.ராஜா அவர்கள் PVC Cable வாங்கித்தர முன்வராததால் வேறு வழியின்றி திரு K.A.A.ராஜா அவர்களின் கூடுதல் மின்பளு விண்ணப்பம் கடந்த 16.02.2024 அன்று ரத்து செய்யப்பட்டதாகவும், மின்வாரிய பண்டகசாலையில் மின்மாற்றி இல்லாத போதோ அல்லது மின்மீட்டர் இல்லாத போதோ மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரிடம் அவற்றை வாங்கித் தரும்படி கேட்பதும் அதற்குண்டான தொகையை மின்கட்டணத்தில் கழித்துக் கொடுப்பதும் ஏற்கனவே TANGEDCO வில் நடைமுறையில் உள்ளதாகவும், இதன் அடிப்படையிலேயே PVC Cable TANGEDCO பண்டகசாலையில் இல்லாததால் திரு.K.A.A ராஜா அவர்களை PVC Cable வாங்கித் தரும்படியும் அதற்குண்டான தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் கழித்துக் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டதாகவும், மின்மாற்றி இல்லாததால் விண்ணப்பதாரரிடம் மின்மாற்றி வாங்கிக் கொள்ளலாம் என்று Lr.No:CE/SE/MM/II//EED/A5/F.DT/D.NO:2239/22 DATE:06.01.2022 மூலம் TANGEDCO அனுமதி கொடுத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதால் அவர் செலுத்திய தொகை TANGEDCO தலைமையகத்திலிருந்து விண்ணப்பதாரரின் Bank Account-க்கே Refund செய்வதற்கான நடவடிக்கையில் உள்ளதாகவும், TANGEDCO பண்டகசாலையில் PVC Cable இல்லாததால் தான் வேறு வழியின்று திரு.K.A.A.ராஜா அவர்களிடம் cable வாங்கித் தரும்படியும் அதற்குண்டான தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் கழித்து கொடுக்கப்படும் என்றும் கூறப்பட்டதாகவும், அவர் வெகுநாட்களாக Cable வாங்கித் தராததால் தான் விணைப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் மதுரை மாவட்டம், திருமங்களம் தாலுகா, 24/2 செங்குளம் கிழக்கு தெருவில் உள்ள தனது வீட்டிற்கு (மின் இணைப்பு எண். 135-001 746/TFIA) கூடுதல் மின் பளு வேண்டியதன் காரணமாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டி 06.09.2023 அன்று ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்க கட்டணத் தொகை ரூ.9,215/ அன்றே செலுத்தியதாகவும், கூடுதல் மின்பளு மற்றும் ஒருமுனையில் இருந்து மும்முனை மின்சாரமாக மாற்றி வழங்க திருமங்கலம்/உதவி செயற்பொறியாளரால் 29.09.2023 அன்று மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனது விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கழித்து 16.02.2024 அன்று தனது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக குறுஞ்செய்தி வாயிலாக அறிவிக்கப்பட்டதாகவும், தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் படி உரிய கால கெடுவுக்குள் (60 நாட்களுக்குள்) தனக்கு மும்முனை மின்சாரம் வழங்காமல் விண்ணப்பம் பதிவு செய்து பணம் செலுத்தி ஐந்து மாதங்கள் கடந்தும் தனக்கு மும்முனை மின்சாரம் வழங்காமல் மாறாக தனது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும், தான் செலுத்திய பணம் ரூ.9.235/ ல் ரூ.1345/- மட்டுமே திருப்பி அளிக்கப்படும் என தனக்கு கிடைத்த குறுஞ்செய்தி தொடர்பாகவும் மன்றத்தில் முறையிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மின் குறைதீர் மன்றத்தில் எதிர்மனுதாரராக கலந்து கொண்ட செயற்பொறியாளர்/ திருமங்கலம் அவர்கள் விண்ணப்பதாரராகிய தன்னிடம் கேபிள் வாங்கித் தருமாறு கோரப்பட்டதாகவும் விண்ணப்பதாரர் அதை ஏற்றுக் கொள்ளாததால் பணியை முடிக்க இயலாததை தொடர்ந்து விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்ததாகவும், விண்ணப்பதாரரிடம் கேபிள் வாங்கித் தருமாறு கோரப்பட்டதாகவும் அதை விண்ணப்பதாரர் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும், விண்ணப்பதாரராகிய தனக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எந்த கடிதமும் கிடைக்கப் பெறவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 விண்ணப்பதாரர் தான் கேபிள் வாங்கிக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என விண்ணப்பதாரருக்கு முன் அறிவிப்பு கடிதம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்படவில்லை எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சார வழங்கல் தொகுப்பு விதிகளின் படி மின்நுகர்வோருக்கு மின் இணைப்பு வழங்கல் என்பது முழுக்க முழுக்க உரிமதாரரையே சேர்ந்தது எனவும், அவ்வாறிருக்க விண்ணப்பதாரராகிய மின்நுகர்வோரை கேபிள் வாங்கித் தர வற்புறுத்துவது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளுக்கு புறம்பானது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 தனது விண்ணப்பத்தை மறு பரிசீலனை செய்து தனக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என முறையிட்டதற்கு தன்னை மீண்டும் இணையத்தில் விண்ணப்பம் புதிதாக பதிவு செய்து கட்டணத் தொகை செலுத்தினால் தான் மின்சார இணைப்பு வழங்க முடியும் என தெரிவித்ததாகவும், எனவே தனது கோரிக்கையை மேல்முறையீட்டு மனுவாக ஏற்றுக் கொண்டு தனது விண்ணப்பத்தை மறு பரிசீலனை செய்து தனக்கு மும்முனை மின்சாரம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.7 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் விண்ணப்பதாரர் மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, செங்குளம் கிழக்குத் தெருவில் உள்ள திரு K.A.A.ராஜா அவர்களின் வீட்டிற்கு ஏற்கனவே ஒருமுனை மின்இணைப்பு எண் 135-001-746 TF IA உள்ளதாகவும், கடந்த 06.09.2023 அன்று இணையம் வாயிலாக தனது வீட்டிற்கு கூடுதல் மின்பளு கேட்டு ஒருமுனை மின்இணைப்பை (1KW) மும்முனை மின்இணைப்பாக கூடுதல் 3KW மாற்றித் தரும்படி விண்ணப்பித்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்கண்ட விண்ணப்பத்தின் மீது களஆய்வு செய்ததில் இந்த கூடுதல் மின்பளு மின் இணைப்பு 45 மீட்டருக்கு ACSR 7/2.59 mm conductor ஆகவும் மற்றும் 35 மீட்டருக்கு PVC Cable ஆகவும் மின் விஸ்தீரனம் செய்து மின்இணைப்பு வழங்க உரிய அனுமதி பெற்றுள்ளதாகவும், ஏனெனில் திரு K.A.A ராஜா அவர்களின் வீடு இருக்கும் தெரு மிகவும் குறுகலான சந்தாக இருப்பதால் அந்த சந்தில் ஏற்கனவே இருக்கின்ற

மின்தொடர் Cable ஆக தான் இருக்கின்றதாகவும், எனவே தற்பொழுதும் மும்முனை மின்சாரம் வழங்கவும், Cable போட உத்தேசித்து அதற்கான அனுமதியும் பெற்றுள்ளதாகவும், மனுதாரர் கூடுதல் மின்பளுவிற்கு உண்டான கட்டணத்தை Online வழியாக செலுத்தியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 PVC Cable TANGEDCO பண்டகசாலையில் இல்லாததால் விண்ணப்பதாரரிடம் PVC Cable வாங்கித் தரும்படியும் அதற்குண்டான தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் கழித்துத் தரப்படும் என்றும் 15 தினங்களுக்குள் Cable வாங்கித் தரவில்லை என்றால் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என்று அறிவிப்பு கடிதம் திரு K.A.A.ராஜா அவர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும், அதன்பிறகு வெகுநாட்களாகியும் திரு. K.A.A.ராஜா அவர்கள் PVC Cable வாங்கித்தர முன்வராததால் வேறு வழியின்றி கூடுதல் மின்பளு விண்ணப்பம் கடந்த 16.02.2024 அன்று ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 மின்வாரிய பண்டகசாலையில் மின்மாற்றி இல்லாத போதோ அல்லது மின்மீட்டர் இல்லாத போதோ மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரிடம் அவற்றை வாங்கித் தரும்படி கேட்பதும் அதற்குண்டான தொகையை மின்கட்டணத்தில் கழித்துக் கொடுப்பதும் ஏற்கனவே TANGEDCO வில் நடைமுறையில் உள்ளதாகவும், இதன் அடிப்படையிலேயே PVC Cable TANGEDCO பண்டகசாலையில் இல்லாததால் திரு.K.A.A ராஜா அவர்களை PVC Cable வாங்கித் தரும்படியும் அதற்குண்டான தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் கழித்துக் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். தற்பொழுது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதால் அவர் செலுத்திய தொகை TANGEDCO தலைமையகத்திலிருந்து விண்ணப்பதாரரின் வங்கி கணக்கிற்கு Refund செய்வதற்கான நடவடிக்கையில் உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 மின்குறைதீர்ப்பாளின் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீடு குறுகிய பாதையில் உள்ளதை ஏற்றுக்கொண்டார். மேலும், ரத்து செய்யப்பட்ட தனது விண்ணப்பத்தை திரும்ப பெற்று கொண்டு தனக்கு மும்முனை மின்சாரம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டார். மேல்முறையீட்டாளரின் வீடு குறுகிய பாதையில் இருந்ததன் காரணமாக அவரிடம் கேபிள் வாங்கித் தருமாறு எதிர்மனுதாரர்

கோரியதும் அவர் கேபிள் வாங்கி தரவில்லை என்ற காரணத்திற்காக அவருடைய விண்ணப்பத்தை ரத்து செய்த எதிர்மனுதாரரின் செயல் ஏற்புடையதாக இல்லை.

7.12 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் பகிர்மான விதி தொகுப்பு எண் 29(16)–இன்படி நுகர்வோரின் வளாகத்தில் மின்மாற்றி மற்றும் அது தொடர்பான மின்சாதனங்கள் ஏதேனும் அமைக்கப்பட நேர்ந்தால் அதற்குண்டான தொகையை தவிர்த்து வளாகத்தில் அமையவிருக்கும் மின் இணைப்பு தொடருக்கான கட்டணம் மின் நுகர்வோரை சாரும். ஆனால் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் வளாகம் வரை அமைக்கப்பட வேண்டிய மின் இணைப்பு தொடர் (service line) குறுகிய சந்தில் உள்ள பொதுப்பாதையில் உள்ளதாக அறியப்படுகிறது. அவ்வாறு உள்ள நேர்வில் காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடர் (insulated service line) அமைத்து ஒருமுனையிலிருந்து மும்முனையாக மாற்றி மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். எனவே, மின் கம்பிக்கு பதிலாக காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடரை வாங்க வலியுறுத்திய எதிர்மனுதாரரின் செயல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிக்கு முரண்பாடாக தெரியவருகிறது.

7.13 மேலும், எதிர்மனுதாரரான உதவி பொறியாளர் அந்த காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடரை மேல்முறையீட்டாளர் வாங்கி தருவதற்கான அறிவிப்பு கடிதம் வழங்கியதாகவோ அல்லது அவர் வாங்கி தருவதாக ஒப்புக் கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர் காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடரை வாங்கித் தராததால் அவருடைய விண்ணப்பத்தை இரத்து செய்தது சரியான நிலைப்பாடாக இல்லை. இந்நிலையில் எதிர்மனுதாரர் தற்சமயம் காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடரை உரிமதாரரால் நிறுவப்படும் என்பதால் மேல்முறையீட்டாளரின் இரத்தான விண்ணப்பத்தின் பழைய நிலையை மீட்டெடுத்து (restore the original status of the cancelled application) மும்முனை மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

## 8.0 <u>பகுப்பாய்வு:</u>

8.1 மேல்முறையீட்டாளர் காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடர் வாங்கி தருவதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில் மேல்முறையீட்டாளர் காப்பிடப்பட்ட மின் இணைப்பு தொடர் வாங்கி தரவில்லை என அவரது விண்ணப்பத்தை எதிர்மனுதாரர் இரத்து செய்தது சரியான நடவடிக்கை என தீர்வு செய்த மின் குறைதீர்மன்றத்தின் ஆணை சரியான செயலாக கருதப்படவில்லை. எனவே எதிர்வரும் காலங்களில் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் தன்னுடைய தீர்வை முடிவு செய்யும் முன்பு ஆவணங்களில் உள்ள உண்மைத் தன்மை அறிந்து சரியான தீர்வு வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

9.0 <u>முடிவுரை</u>:

9.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் இரத்தான விண்ணப்பத்தின் பழைய நிலையை மீட்டெடுத்து (restore the original status of the cancelled application) மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்திரவிடப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு உரிய காலத்தில் மின் இணைப்பு வழங்கி அது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

9.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 44/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு K.A.A. ராஜா,
44/55, T.N.K. புரம், வடக்கு கொங்கு மெயின் ரோடு,
ஜெய சக்தி அரிசி கடை பின்புறம்,
பாய் காம்பவுண்ட், திருப்பூர் – 641607 .

2. மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K. புதூர், மதுரை – 625 007.

3. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

4. உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

5. உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/செங்குளம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.